முருகப்பெருமான் துணை

**மகான் பீமசேனன் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

06.09.2022, செவ்வாய்கிழமை

1. வரம் தரும் ஞான யோகியே
வள்ளலே வாழும் ஞானியே
அறம்வழி மக்களை தேற்றிட
ஆறுமுகனாய் வந்த தவசியே
2. தவசியே ஆறுமுக அரங்கனே
தானுன் பெருமைதனை கூறி
அவனியில் பீமசேனன் யானும்
அருளுவேன் அருளாசி தன்னை
3. தன்னையே சுபகிருது யாளி திங்கள்
தக்க மூவேழுதிகதி குசன் வாரம்
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 21 நாள், 06.09.2022 செவ்வாய்கிழமை)
மண்ணுலகம் வளம்பெற உரைப்பேன்
மாதருமம் கொண்டு உலகை காக்கும்
4. காக்கும் உயர் சேவை ஆற்றுகின்ற
கந்தப்பெருமான் செயல்பாடுகளை
தேக்கமின்றி உலகமக்கள் ஏற்று
தேசிகனார் வழி சரவண சோதி ஏற்றி
5. ஏற்றி ஞானம்தனை பயிலவே
எவ்வுயிர்க்கும் துன்பம் தரா வண்ணம்
உற்றதொரு சைவ நெறி ஏற்று
உயர்வான தருமம்தனை செய்துவர
6. வருகவே இவை செயல்பாடுகளுள்
வல்லமைபட கடைபிடிக்கப்படவே
பேருலகில் குற்றங்கள் பிரச்சினைகள்
பிரிவினைகள் பேதா பேதங்கள் எனும்
7. எனும் அல்லல் அவலம் இல்லா
எங்கும் சமத்துவ தரும நெறி
ஞானமாகப் பரவி கலியிலும்
ஞானவான்கள் படை பெருகி
8. பெருகியே அமைதியும் பாதுகாப்பும்
பெருந்தன்மைபட மக்கள் போக்கும்
முருகப்பெருமானின் அருளும் தயவும்
முழுமை ஞானமாக நிரம்பி இனிதே
9. இனிதே இந்தக் கலியுகமோ
எல்லாம் தரும் ஞானயுகமாக
கனிவேலவன் தலைமை போற்றும்
கருணைமிக்க ஞானவான்களை கொண்ட

10. கொண்ட ஆளுமை வருகின்ற
குறைவிலா ஞான ஆட்சியுமாக
தொண்டுள்ளம் மிக்க அதிகாரிகள்
துறைகள் யாவுமே சேவை மங்காத

11. மங்காத மாண்பு கொண்ட வண்ணம்
மக்களை போற்றும் காக்கும்
ஓங்காரன் ஞான ஆட்சிக் காலமாக
உலகமே மாற்றம் காண்கும்
அருளாசி முற்றே

–சுபம்–